## 3. தகவல் கோரல்

### (அ) ஆழியாறு பகுதியில் தென்னை மரங்களுக்குத் தண்ணீர் வழங்குதல்

**திரு. கோவை தங்கம்:** *தலைவர் அவர்களே . . .*

**திரு. வை. சிவபுண்ணியம்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே . . .*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. கோவை தங்கம், என்ன? சொல்லுங்கள்.*

*முற்பகல் 10-55*

**திரு. கோவை தங்கம்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய வால்பாறைத் தொகுதியிலுள்ள ஆழியாறைச் சுற்றி இருக்கின்ற கிராமங்களில் சுமார் 12 ஆயிரம் தென்னை மரங்கள் காய்ந்துகொண்டு இருக்கின்றன. விவசாயிகளுக்கு நல்ல அற்புதமான திட்டங்களை மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் ஐயா அவர்கள் வழங்கியிருக்கின்ற இந்த நேரத்தில், தென்னை மரங்கள் காய்ந்து வருவதால், விவசாயிகள் மிகவும் வருத்தத்தில் இருக்கின்றார்கள். ஆகவே, ஒரு மாதத்திற்கு உயிர்த் தண்ணீர் வழங்குவதற்கு அரசு முன்வருமா என்பதைத் தங்களின் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.*

***மாண்புமிகு திரு. துரைமுருகன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டது உண்மைதான். எனினும், அங்கு இருக்கக்கூடிய சேத்துமடை B-கெனாலுக்கு மட்டும் அவர்கள் தண்ணீர் கேட்கிறார்கள். அதே மாதிரி சேத்துமடைக் கால்வாய், வேட்டைக்காரன்புதூர் கால்வாய், பொள்ளாச்சி கால்வாய், ஆழியாறு feeder கால்வாய், இந்தக் கால்வாய்களில் இருக்கிற தென்னை மரங்களும் காய்கிற நிலையில் இருக்கின்றன. எங்களுக்கும் உயிர்த் தண்ணீர் தர வேண்டுமென்றுதான் அவர்களும் கேட்கிறார்கள். ஆகவே, இவருக்குத் தண்ணீர் விடுகின்றபோது, அவர்களுக்கும் தண்ணீர் விட வேண்டும். ஏனென்று கேட்டால், சேத்துமடையில் 10 ஆயிரம் ஏக்கர்;*

[திரு. துரைமுருகன்] [2007 ஏப்ரல் 10

வேட்டைக்காரன்புதூரில் 16 ஆயிரம் ஏக்கர்; பொள்ளாச்சியில் 22 ஆயிரம் ஏக்கர்; feeder கெனாலில் 13 ஆயிரம் ஏக்கர்; ஆக, இப்படி இவர்களுக்குத் தண்ணீர் விடுகின்ற அளவிற்குத் தண்ணீர் இல்லை. ஆழியாறில் என்ன நிலைமை என்று கேட்டால், 3,864 மில்லியன் கன அடித் தண்ணீர் இருக்க வேண்டிய இடத்தில், 1,100 கன அடித் தண்ணீர்தான் இருக்கிறது. இதிலேயே, P.A.P.-யில் third reach-க்கு இப்போது தண்ணீர் கொடுக்க வேண்டும். அதைக் கொடுத்துக்கொண்டு இருக்கிறோம். மடக்கடவில் கேரளாவிற்குத் தண்ணீர் கொடுத்தாக வேண்டும். அதிலும் தண்ணீர் கொடுத்தாக வேண்டும். மீதியிருப்பதை எப்படியாவது சுரண்டி, தண்ணீர் கொடுக்க முடியுமா என்று கேட்டால், மிகவும் நெருக்கடியான நிலையில்தான் இருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்த பிறகு, அதிகாரிகளோடு நான் தொடர்புகொண்டு பேசியிருக்கிறேன். அவர்கள், third reach-நின்ற பிறகாவது ஏதாவது முடியுமா என்று பார்க்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். இருக்கின்ற தண்ணீரில் ஓரளவு மீதமானாலும், அதைக் கொடுப்பதற்கு இந்த அரசு இயன்ற அளவிற்கு முயற்சி எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

## (ஆ) திரு. பி. சீனிவாச ராவ் அவர்களுக்குத் திருத்துறைப்பூண்டியில் நினைவுச் சின்னம் அமைத்தல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** பேரவைத் தலைவர் அவர்களே, எங்களது ஒன்றுபட்ட தஞ்சை மாவட்டத்தின் அடிமைப்பட்டுக் கிடந்த விவசாயிகள், விவசாயத் தொழிலாளர்களையெல்லாம் ஒன்று திரட்டி, அவர்களுக்குச் சங்கம் வைத்துப் போராடுவதற்குத் தலைமை தாங்கியவர் இந்திய சுதந்திரப் போராட்டத்தினுடைய தளகர்த்தர்களிலே ஒருவராக இருந்து போராடிய ஒப்பற்ற தலைவர் திரு. பி. சீனிவாச ராவ் அவர்கள். அவர்களுடைய நூற்றாண்டு விழா இன்றையதினம். இந்தப் பேரவையிலே ஏற்கெனவே பேசப்பட்டு, திரு. பி. சீனிவாச ராவ் அவர்களுடைய நினைவைப் போற்றுகின்ற வகையிலே ஒரு நினைவுச் சின்னம் அமைக்க வேண்டுமென்ற கோரிக்கையும் விடப்பட்டிருக்கிறது. அது திருத்துறைப்பூண்டியிலே அமைக்கப்படுவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு, இடமும் தேர்வு செய்யப்பட்டிருக்கிறது. ஆகவே, இன்றைக்கு அவருடைய